
# 05

# இஸ்லாத்தின் சிறப்பியல்புகள்

அல்லாஹ் மனிதனைப் படைத்த காலம் முதல் தனது தூதர்கள் மூலம் மனித சமூகத்துக்கு வழிகாட்டியுள்ளான். அவ்வழிகாட்டல்கள் யாவும் அவனுடைய மார்க்கமாகும். அதனை நாம் இஸ்லாம் என்று அழைக்கிறோம்.

முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்கள் தொடக்கம் இறுதி நபி முஹம்மத் r அவர்கள் வரை வந்த அனைத்து நபிமார்களும் ரஸூல்மார்களும் இஸ்லாம் மார்க்கத்தையே போதித்தார்கள். பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த சமூகங்களுக்கு வழிகாட்டுவதற்காக ஸுஹ்புகளையும் தவ்ராத், ஸபூர், இன்ஜீல் முதலிய வேதங்களையும் அல்லாஹ் வழங்கினான். இறுதி நபி முஹம்மத் r அவர்களுக்கு இவை அனைத்தையும் பூரணப்படுத்தி புர்கான் வேதமாகிய அல்குர்ஆனை வழங்கினான். இது இறுதி நாள் வரை எல்லா மக்களாலும் பின்பற்றத் தக்க பூரண மார்க்கமாக விளங்குகிறது. இதனை நாமும் முழுமையாகப் பின்பற்றி வாழ்வோம்.

முதலில் 'இஸ்லாம்' என்ற அறபுப் பதத்துக்கான பொருளை விளங்கிக் கொள்வோம்.




இஸ்லாம் என்ற சொல், ஒரு தனிமனிதனையோ அல்லது பிரதேசத்தையோ அல்லது ஓர் இனத்தையோ அடிப்படையாகக் கொண்டு அமையவில்லை என்பதைக் கவனியுங்கள். இதன் மூலம், இஸ்லாம் எல்லோருக்கும் பொதுவானது என்பதையும், இஸ்லாத்தை எவரும் ஏற்று எவ்வேளையிலும் அதனைப் பின்பற்ற முடியும் என்பதையும் விளங்கிக் கொள்கின்றீர்கள். இது இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும்.

இஸ்லாத்தின் அடிப்படை அம்சமாக ஈமான் (நம்பிக்கை) விளங்குகின்றது. அல்லாஹ்வை ‘இலாஹ் (வணக்கத்துக்குரியவன்)’ ஆகவும், ‘ரப்பு (இரட்சகன்)’ ஆகவும் ஏற்றுக் கொள்வது இதன் முதல் அம்சமாகும். முஹம்மத் r அவர்களை ‘ரஸூலாகவும் வழிகாட்டியாகவும்’ ஒப்புக் கொள்வது அடுத்த அம்சமாகும். இவற்றுடன் ஈமானின் ஏனைய விடயங்கள் பற்றி நம்பிக்கை கொள்வதும் கடமையாகும். இவற்றை நீங்கள் முன்னைய வகுப்புகளில் படித்திருப்பீர்கள்.

அல்லாஹ் முஸ்லிம்களக்கு மாத்திரமல்லாது, அனைத்து மனிதர்கள், உயிரினங்கள் மற்றும் எல்லாப் படைப்பினங்களுக்கும் ‘ரப்பு’ ஆக விளங்குகின்றான். இதனை பின்வரும் வசனத்தில் காணலாம்.

‘‘அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் (அல்குர்ஆன் 1:2)

அகிலத்தாரைப் படைத்துப் போசிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்

முஹம்மத் r அவர்கள், எங்களுக்கு மாத்திரமல்ல; ஏனைய மனிதர்கள், உயிரினங்கள் மற்றும் அனைத்து படைப்பினங்களுக்கும் ‘ரஹ்மத்’ ஆக விளங்குகின்றார்கள். இதனை கீழ்க் காணும் வசனத்தில் காணலாம்.

‘‘வமா அர்ஸல்னாக இல்லா ரஹ்மத்தன் லில் ஆலமீன்’’ (அல்குர்ஆன் 21:107).

நபியே நாம் உம்மை உலகத்தார் யாவருக்கும் ஓர் அருளாகவே அன்றி அனுப்பவில்லை.

வழிகாட்டியாக அனுப்பப்பட்ட அல்குர்ஆன், முழு மனித சமுதாயத்துக்கும் உரியதாக விளங்குகின்றது என்பதை பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

‘‘இன்ஹுவ இல்லா திக்ரா லில் ஆலமீன்’’ (அல்குர்ஆன் 6:90).

உலகத்தார் யாவருக்கும் இது ஒரு நல்லுபதேசமே அன்றி வேறில்லை.

அகிலங்களின் இரட்சகனான அல்லாஹ்வினால் அவனுடைய தூதர் முஹம்மத் r அவர்களுக்கு அருளப்பட்ட அல்குர்ஆன், முழு மனித சமூகத்துக்கும் உரியது என்பதை மேலுள்ள அல்குர்ஆன் வசனங்கள் மூலம் விளங்கியிருப்பீர்கள். இவை பற்றி அறிந்து கொள்வதும் எமது நம்பிக்கையுடன் தொடர்பான விடயமாகும்.

இஸ்லாம் ஈமானுக்கு அடுத்து, வணக்க வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. இதனை ‘இபாதத்’ என்று அழைக்கிறோம். அல்லாஹ்வுக்கு நன்றி பாராட்டவும், கட்டுப்பாட்டுடன் வாழவும் வணக்க வழிபாடுகள் துணைபுரிகின்றன. வணக்க வழிபாடுகள், எமது இரட்சகனான அல்லாஹ்வுடன் நேரடியான, நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதும் இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும்.

மேலும், இஸ்லாம் நற்பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. ஒருவரது ஈமானும், இபாதத்தும் அவரில் நற்பண்பினைத் தோற்றுவிக்க வேண்டும். நற்பண்பினை ஏற்படுத்தாத வணக்க வழிபாடுகள் பயனற்றவை என்பதை அல்குர்ஆனும் நபிமொழிகளும் சுட்டிக் காட்டுகின்றன.

நபி r அவர்கள் எப்போதும் நற்குணமுள்ளவர்களாகத் திகழ்ந்தார்கள். தம்மைப் பின்பற்றிய மக்களிடையேயும் நற்பண்பைத் தோற்றுவித்தார்கள். அதன் மூலம் ஓர் உயரிய

சமூகத்தை உருவாக்கிச் சென்றார்கள். அச்சமூகத்தின் வழித்தோன்றல்களான நாமும் நற்பண்புள்ளவர்களாகத் திகழ்வோம்.

**நற்பண்புகளுள் சில**

- எதையும் அல்லாஹ்வுக்காகச் செய்வோம்
- அனைத்து உயிரினங்கள் மீதும் அன்பு காட்டுவோம்
- பெற்றாருக்கு உபகாரம் செய்வோம்
- முதியோரையும் அயலாரையும் ஆசிரியரையும் மதித்து நடப்போம்
- நம்பிக்கை, நாணயமாக நடந்து கொள்வோம்
- உண்மை பேசுவதை உயர்வாக மதிப்போம்
- தயாளத்துடனும் விட்டுக் கொடுப்புடனும் வாழ்வோம்
- ஒற்றுமையையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவோம்
- ஏழை எளியோருக்கும் இயலாதோருக்கும் உதவிக் கரம் நீட்டுவோம்

இவற்றோடு ஏனைய நற்குண நற்பண்புகளையும் எம்மிடத்தில் ஏற்படுத்திக் கொள்வோம்.

இஸ்லாம், நற்பண்புடன் நடப்பதை முஸ்லிம்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தவில்லை. முஸ்லிமல்லாதவர்களுடனும் ஏனைய உயிரினங்களுடனும் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டுமெனக் கட்டளையிடுகின்றது. இஸ்லாத்தின் சிறப்பம்சங்களில் இதுவுமொன்றாகும்.

மேலும் மத்தியில் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் தோற்றுவிக்க இஸ்லாம் வழிகாட்டுகின்றது. இதன் அடிப்படையில்,

- இரத்த உறவு முறையை (அர்ரஹ்ம்) பேணி நடக்குமாறு வலியுறுத்துகின்றது.
- இஸ்லாமிய சகோதரத்துவத்தின் மூலம் முஸ்லிம்களை ஒன்றிணைக்கின்றது.
- மனிதர்களை ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்ததாகக் கூறி, எல்லா மனிதர்கள் மத்தியிலும் பிணைப்பை உருவாக்குகின்றது.
- ‘‘அல்லாஹ்வின் படைப்புக்கள் யாவும் ஒரே குடும்பம்’’ (ஹதீஸ்) எனக் கூறி அனைத்துப் படைப்பினங்களுக்கு இடையிலும் இணக்கப்பாட்டைத் தோற்றுவிக்கின்றது.

உலகப் படைப்பினங்கள் யாவற்றிலும் மனிதனே மேலானவன் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். அதேவேளை மனிதர்கள் யாவரும் சமமானவர்கள் என்பதும் அவர்கள் மத்தியில் குல, நிற, இன, மொழி, பிரதேச வேறுபாடுகள், குடும்ப-பொருளாதார ரீதியிலான உயர்வு-தாழ்வுகள் காணப்படக் கூடாது என்பதும் இஸ்லாத்தின் முக்கிய போதனையாகும்.

சமூகத்தை ஒருவனுடைய பக்தி, ஒழுக்கம், நடத்தை என்பவற்றின் மூலமே அவன் அல்லாஹ்விடத்தில் சிறப்பானவனாகக் கணிக்கப்படுவான்.

நாம் ஒழுக்கமும் நேர்மையுமுள்ளவர்களாக இருந்தால் அல்லாஹ்விடத்திலும் மனிதர்களிடத்திலும் சிறப்படையலாம். எமது வாழ்வில் உயர்வு அடையலாம்.

இஸ்லாம் எல்லாக் காலத்துக்குமுரிய மார்க்கமாகும். ஆதலால் கால சூழ்நிலைக்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் அம்சங்களும் அதில் காணப்படுகின்றன. உதாரணமாக, 'அவ்ரத்தை' மறைப்பது எல்லாக் காலத்திலும் இடம்பெற வேண்டிய நெகிழாத அம்சமாகும். ஆனால் எதனால், எப்படி மறைக்க வேண்டுமென்பது காலத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப நெகிழ்ந்து மாற்றம் பெறலாம். ஆனால், அவை அவ்ரத்தை வெளிக்காட்டுவதாக அமையக் கூடாது.

இஸ்லாம் மனிதனை உயர்ந்த படைப்பாகக் கருதுகிறது. ஆதலால் ஒவ்வொரு மனிதனதும் உயிரும், உடலும், மானமும், பொருளும் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும். இது இஸ்லாம் மனிதனுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமையாகும்.

இவற்றின் மூலம் இஸ்லாம் இலகுவானதும் உயர்வானதுமான மார்க்கம் என்பதையும், எமது முயற்சிகளுக்கு இஸ்லாம் மதிப்பளிக்கின்றது என்பதையும் நீங்கள் விளங்கி இருப்பீர்கள்.

**எமது வாழ்க்கைக்கு...**
**உயிரிலும் மேலான இஸ்லாத்தை எப்போதும் எல்லா நிலையிலும்**
**பின்பற்றி வாழ்ந்திடுவோம்.**

**பயிற்சி:**

1. நற்பண்புகளுக்கு முக்கியத்துவமளிப்பது இஸ்லாத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். கிழே குறிப்பிடப்பட்டிருப்போருடன் நாம் எவ்வாறு நற்பண்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு மும்மூன்று உதாரணங்கள் எழுதுக.

   **பெற்றோருடன்**
   i)
   ii)
   iii)

   **அயலாருடன்**
   i)
   ii)
   iii)

   **ஆசிரியர்களுடன்**
   i)
   ii)
   iii)

   **பிற மதத்தவருடன்**
   i)
   ii)
   iii)

2. நம்பிக்கை (ஈமான்)யுடன் சம்பந்தப்பட்ட இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள் இரண்டைக் கூறுக.

3. ''இஸ்லாம் ஒரு நீதியான மார்க்கமாகும்'' இதற்கு இரண்டு உதாரணங்களை எழுதுக.